දුරකථන ) 0112669192 ,0112675011
தொலைபேசி 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 ,0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி
e-mail )

වෙබ්අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம்

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

මගේ අංකය )
எனது இல )
My No. )CF/EXC/03/2024

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2024/06/13
Date )


பொதுச் சுற்று நிருப இலக்கம் : 02 - 99 /2024

மாகாண சுகாதார செயலாளர்கள்
பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை
பணிப்பாளர்- தேசிய வைத்தியசாலை - கண்டி
மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்
மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
உரிய நிறுவனத் தலைவர்கள்

**சுகாதாரம் அமைச்சின் (MT – 05) சம்பள அளவுத்திட்டத்தின் துணை மருத்துவ சேவையுடன் தொடர்புடைய பொது சுகாதார பரிசோதகர் சேவை II "ஆ" பிரிவு / தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை – 2024 (இரண்டாம் தடவை)**

பொது சுகாதார பரிசோதகர் II "ஆ" பிரிவு / தரம் III உத்தியோகத்தர்கள் தரம் III யிற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைதற்கு முன்னர் பூர்த்திசெய்ய வேண்டிய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை **2024/08/04** ம் திகதி தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது. பரீட்சை நடைபெறும் இடம், மற்றும் நேர அட்டவணை என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும்.

02. **தகைமைகள்**

2024/07/03 ஆம் திகதியுடன் பொது சுகாதார உத்தியோகத்தர் சேவையின் II "ஆ" பிரிவு / தரம் III ற்கு நியமனம் பெற்று இதுவரை இப் பரீட்சையினை பூரணப்படுத்தியிராத உத்தியோகத்தர்கள் மாத்திரம் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

03. **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் இருந்து விடுவித்தல்**

அரச நிருவாகச் சுற்று நிருபம் 6/2006 ன் பிரகாரம் 2016/09/22 ம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் முன்னைய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கமைவாக முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப்பிரமாணம் ஆகிய விடயங்களில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர்கள் புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள முதலாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.

04. **விண்ணப்பங்கள்**

இச் சுற்று நிருபத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் தங்களினுடைய திணைக்களத் தலைவரின் ஊடாக பணிப்பாளர் (பரீட்சைகள்), சுகாதார அமைச்சு "சுவசிரிபாய" , இலக்கம் - 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 என்னும் முகவரிக்கு **2024/07/03** ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர **"பொது சுகாதார பரிசோதகர் சேவை II "ஆ" பிரிவு / தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை – 2024 (இரண்டாம் தடவை)"** எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு விண்ணப்பதாரி சகல தகைதைகளையும் புர்த்தி செய்துள்ளார் என்பதை தனிநபர் கோவைகளை பேணும் உத்தியேகைத்தரும் விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என திணைக்கள தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும்.** தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா. 110.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட (9" × 4") கடித உறைகள் 01 இனையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ,அல்லது அலுவலக

முகவரியினையோ குறிப்பிடலாம்) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகத்திக்கு பின்னராக , கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிப்படும்.

கவனிக்கவும் : மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பம் **A4** தாளின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து தாயரிக்கப்படவேண்டும். முதற் பக்கத்தில் இலக்கம் 01 - 04 தொடக்கமும் இரண்டாம் பக்கத்தில் 05 - **09** தொடக்கமும் அமையும் வண்ணம் விண்ணப்பம் தயாரிக்கப்படல் வேண்டும். மேற்படி தகவல்களுக்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

05. பரீட்சைக் கட்டணம்

I பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணத்திலிருந்து விதிவிலக்கப்படுவர். ஏனைய விண்ணப்பதாரர்கள் விடயம் ஒன்றிற்கு ரூபா 25.00 பெறுமதியுடைய முத்திரையினை ஒட்டி அதன்மீது கையொப்பத்தினையும், திகதியினையும் இட்டு உரிய முறையில் மதிப்பு நீக்கம் செய்யப்படல் வேண்டும்.

II இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது எக்காரணத்தினைக் கொண்டும் வேறு பரீட்சையொன்றிற்கு மாற்றவோ, மீள வழங்கப்படவோ மாட்டாது.

06. பரீட்சைக்கு உட்படுத்திக் கொள்ளல்

I ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். அப் பரீட்சை அனுமதி அட்டைகளினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறின்றேல் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அளிக்கப்படமாட்டாது.

II ஆண், பெண் பரீடசார்த்திகளினால் பரீட்சை நிலையத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு தனது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை
(ஆ) சுகாதாரம் அமைச்சினதும் அதனுடன் ஏற்புடைய நிறுவனங்களினால் முறைப்படி வழங்கப்பட்ட அடையாள அட்டை
(இ) வலுவுடைய சாரதி அனுமதிப்பத்திரம்
(ஈ) வலுவுடைய கடவுச் சீட்டு

07. பரீட்சைத்திட்டம்:

வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை தாபனவிதிக்கோவையும்,அலுவலக நடைமுறைகளும் மற்றும் நிதிப்பிரமாணம் எனும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவின் பொருட்டும் 100 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தியடைவதன் பொருட்டு ஒவ்வொரு பகுதியிற்கும் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரே அமர்வில் அல்லது பல அமர்வுகளில் பிரிவுகளுக்குத் தோற்றி பரீட்சை யினைப் பூரணப்படுத்திக்கொள்ள முடியும். முதன்முறையாக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் அனைத்துப் பிரிவுகளிற்கும் விண்ணப்பிக்கவேண்டும்.

08. பரீட்சைப் பாடத்திட்டம்

இப்பரீட்சைக்கான நேரம் 03 மணித்தியாலங்களாகும். கட்டுரை வடிவிலான 08 வினாக்க்ளைக் கொண்டுள்ளது. அதில் விரும்பிய ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

8.1 வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை

8.1.1 தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள் வினாப்பத்திரம்

இப்பரீட்சைக்கான நேரம் 03 மணித்தியாலங்களாகும். கட்டுரை வடிவிலான 08 வினாக்களைக் கொண்டுள்ளது. அதில் விரும்பிய ஏதேனும் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100.

* தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளை தழுவியதாக அமையும்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | IV | மாதச் சம்பளம், தற்காலிக தகுதிநிலை, நிரந்தரத் தகுதிநிலை, ஓய்வூதிய உரிமை ஆகியவற்றை வழங்கல் |

* தாபனவிதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XII | லீவு |
| அத்தியாயம் | XIII | புகைவண்டி ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் | XIV | உள்நாட்டில் கடமைப் பிரயாணங்கள் |
| அத்தியாயம் | XIX | அரச இல்லங்கள் |
| அத்தியாயம் | XLVII | பொதுவான நடத்தைகள் மற்றும் ஒழுக்கம் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று விதி முறைகள் |

* அரசசேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின்படி

8.1.2 நிதிப் பிரமாண வினாப்பத்திரம்

இவ்வினாப்பத்தித்திற்கான காலம் 03 மணித்தியாலங்களாகும். அமைப்புக்கட்டுரை வினாக்கள் 08 இனைக் கொண்டமைந்தாகும். விரும்பிய 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். மொத்தப் புள்ளிகள் 100 ஆகும்.

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | I | செலவினம் மற்றும் அரசிறை மதிப்பீடுகள், திரட்டு நிதியம், ஆண்டு மதிப்பீடுகள், ஆண்டு மதிப்பீடுகளுக்கு செய்யப்படும் மாற்றங்கள் (நி.பி. 01 – நி.பி. 68 வரை) |
| அத்தியாயம் | III | நிதிமுகாமையும் வகைகூறும் பொறுப்பும், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தர், கொடுப்பனவுகளுக்கான அதிகாரம் வழங்கல், அங்கீகரித்தல், சான்றுப்படுத்தல், கடமைகளைக் கையளித்தல். (நி.பி. 124- நி.பி. 147) |

09. பரீட்சை தொடர்பான ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல்.

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவிசெய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல், இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்தி மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10. தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது நிறுவனத்தில் கடமையாற்றும் பொருத்தமான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறியத் தரவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**(www.health.gov.lk → Staff Access → Administration → Examination → Circular)**

**கவனிக்கவும் :- சிங்களம், தமிழ், ஆங்கில மொழியிலான சுற்றுநிருபங்களுக்கிடையே ஏதாவது முரண்கள் காணப்படுமாயின் சிங்கள மொழியிலான சுற்றுநிருபமே வலுவுடையதாகும்.**

Chamika E. Gamage
Deputy Director General (Administration) II
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

ஷாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம்) II
செயலாளரின் பொருட்டு
சுகாதார அமைச்சு

| EXC |
|---|
| PHI -III |

அலுவலகப் பாவனையின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதாரம் அமைச்சின் (MT – 05) சம்பள அளவுத்திட்டத்தின் துணை மருத்துவ சேவையுடன் தொடர்புடைய பொது சுகாதார பரிசோதகர் சேவை II "ஆ" பிரிவு / தரம் III இனைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சை - 2024 (இரண்டாம் தடவை)**

01. (அ) (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (தமிழில் எழுதவும்)

..................................................................................................

..................................................................................................

(ii) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெ முத்துக்களுடன் பெயர் ( தமிழில்) ..................................................

..................................................................................................

(iv) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i) பதவி : ..................................................................................

(ii) முதல் நியமனத் திகதி : ..........................................................................

(iii) தற்போது பெறும் வருடாந்த சம்பளம் :..........................................................

(iv) தேசிய அடையாள அட்டை இல : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(v) கையடக்கத் தொலைபேசி இலக்கம் : [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(vi) மின்னஞ்சல் முகவரி : ..........................................................................

02. தாங்கள் இம்முறை தோற்றுவதன் பொருட்டு எதிர்பார்த்துள்ள விடயத்தின் எதிரேயுள்ள கூண்டினுள் (√ ) அடையாளத்தினை இடுக. தோற்ற வில்லையாயின் (X) அடையாளமிடுக.

அலுவலக நிர்வாகமும், தாபன விதிக்கோவையும் [ ] நிதிப்பிரமாணம் [ ]

03. (அ) தற்போது சேவைபுரியும் நிலையம் (தமிழில்) ..................................................

(ஆங்கிலத்தில்) ..................................................................................

(ஆ) அதற்குரிய மாவட்டம் ..........................................................................

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசினால் [ ] மாகாண சபையினால் [ ]

(ஈ) மாகாண சபையாயின் உரிய மாகாணம்..........................................................

(உ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9''x4'' அளவு ரூபா.110.00 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை **ஒன்று** இணைக்கப்பட்டு உள்ளதா?

..................................................................................................

(ஊ) (i) தபால் முகவரி (தமிழில்) ..........................................................................

..................................................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிட்டல் எழுத்துக்களில்) ..........................................

..................................................................................................

04. பரீட்சைக்குத் தோற்றும் மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) ..........................................

05. (அ) இதற்கு முன்னர் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளீர்களா? ..........

(ஆ) தாங்கள் விண்ணப்பிப்பது முதற் தடவையில்லையாயின் முத்திரை ஒட்டப்பட்டுள்ளதா? ..........

| (முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரியின் சான்றிதழ்**

(i) எனது அறிவிற்கும், விசுவாசத்தின் அடிப்படையிலும் இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப் பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும் / முதன் முறை அல்லாதபடியால் ரூபா .................. பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் செய்வதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(ii) சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பாக நியதிச் சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையினை இரத்துச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ..................................

..................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

07. **தனிநபர் கோவையினை கையாளும் விடய உத்தியோகத்தரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் /பின்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், தரம் III ற்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சை இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............................

..........................................
பெயர் மற்றும் கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி .................................................... என்பவரை நான் நன்கு அறிவேன் எனவும், அவ் உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக உள்ளதால் / முதன் முறையாக இல்லாத படியால் ரூபா................ பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும் / முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும், இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகைமை உள்ளதெனவும் எனது முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி .....................................

..................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்)

09. **பன்முகப்படுத்தப்பட்ட /விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திரு/ திருமதி / செல்வி ............................................................ என்பவர் ..................................................
........................................ எனது நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரியின் சுயவிபரக் கோவையில் உள்ள விபரங்களின் படி சரியானவைகள் எனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரருக்கு தகுதி உள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி ...................................

..................................................
பன்முகப்படுத்தப்பட்ட பகுதி /விசேட பிரிவு தலைவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரை இடப்படவேண்டும்.)

*தேவையற்றனவற்றை கீறிடவும்